# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் :- தமிழ் மொழியும் இலக்கியமும்

5ம் வாரம்

தரம் :- 07

தயாரித்தவர்:- P. கமலமாலனி (இ/ப/ இராசகலை தமிழ் வித்தியாலயம்)


Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

**பாட இலக்கம் : 12**

**தலைப்பு : ஈசன் உவக்கும் இன்மலர்**

**01.சரி,பிழை இடுக.**

1. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் ஆவார். ( )
2. மட்டக்களப்பு காரைத்தீவில் ஆறுமுகநாவலர் பிறந்தார். ( )
3. உள்ளக் கமலம் என்பது உருவகஅணி. ( )
4. விபுலானந்தருக்கு புகழ் சேர்த்த நூல் யாழ்நூலாகும். ( )
5. உத்தமனார் வேண்டுவது வெள்ளை நிறப்பூக்களாகும். ( )

**02. கீழ்வரும் வினாக்களுக்கு விடைத் தருக.**

1. ஈசன் உவக்கும் இன்மலர் என்ற பாடலை பாடியவர் யார்?
2. ஈசன் உவக்கும் இன்மலர் என்பதன் பொருள் யாது?
3. இப்பாடலில் குறிப்பிடப்படும் இறைவனைக் குறிக்கும் சொற்கள் எவை?
4. இறைவனது அடிக்கு இணையான மலர் எதுவென கவிஞர் குறிப்பிடுகிறார்?
5. இப்பாடல் எத்தகைய அமைப்பில் இடம்பெற்றுள்ளது?
6. கீழ்வரும் சொற்களுக்கு பொருள் தருக.

   - கமலம் -
   - வள்ளல் -
   - காந்தல் -
   - மாமலர் -
   - கற்பகம் -

**03. தொடர்புபடுத்துக.**

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. சிலையில் எழுத்துப் போல | மிக அரிது |
| 2. உயிரும் உடலும் போல | மனக்கலக்கம் |
| 3. அத்தி பூத்தாற் போல | பிரியாத நட்பு |
| 4. எட்டி பழுத்தாற் போல | வீராவேசம் |
| 5. கடன்பட்டார் நெஞ்சம் போல | அழியாமை |
| 6. காற்றுடன் சேர்ந்த தீ போல | பயனற்றது |

**04. கீழ்வரும் உவமைத் தொடர்களைக் கொண்டு வாக்கியம் அமைக்குக.**

1. அணை கடந்த வெள்ளம் போல -

2. இடியோசை கேட்ட நாகம் போல -

3. சூரியனைக் கண்ட பனி போல -

4. ஈருடலும் ஓருயிரும் போல -

5. சித்திரப் பதுமை போல -

**05. ஒரே பொருள் தரும் இணைமொழியுடன் இணைப்போம்.**

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. நகமும் சதையும் போல | அச்சில்லா வண்டி போல |
| 2. ஓடும் புளியம் பழமும் போல | புறக்குடத்துள் வார்த்த நீர் போல |
| 3. அடியற்ற மரம் போல | இலவு காத்த கிளி போல |
| 4. செவிடன் காதில் ஊதிய சங்கு போல | தாமரை இலையில் தண்ணீர் போல |
| 5. கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல | பூவும் மணமும் போல |